பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

E.P.No.98/2023

ம.சா.–1 .ஜனகரன்– , த/பெ. முத்தையா

நாள். 12.03.2026

ம.சா.1 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–

ஸ்ரீராம் பைனான்ஸ்ல் எனக்கு பவர் கொடுத்தது யார் என்றால் கம்பெனி மேனேஜர் எனக்கு கொடுத்தார். ஸ்ரீராம் பைனான்ஸ் கம்பெனி சார்பாக அனைத்து வழக்குகளில் ஆஜராக எனக்கு அதிகாரம் உள்ளது. சௌந்தரபாண்டியன் இந்த மனுவில் 1ம் எதிர்மனுதாரர் ஆவார். கடன் வாங்கியவர் ஆவார். அவரிடம் ரூ.5,77,000/– பெறுமானமுள்ள வண்டியை நாங்கள் சீஸ் செய்தோம் என்றால் அவராக ஒப்படைத்தார். 2ம் எதிர்மனுதாரர் மூர்த்தி 1ம் எதிர்மனுதாரருக்கு ஜாமீன்தாரர் ஆவார். 1ம் எதிர்மனுதாரர் ரூ.5,77,000/– ரூபாய் வண்டியை சீஸ் செய்யும் போது அவர் ரூ.3,50,000/– எங்கள் நிறுவனத்திற்கு தரவேண்டியிருந்தது. அந்த வாகனத்தை ரூ.4,50.000/–க்கு விற்று விட்டோம் என்றால் சரியல்ல. ரூ.2,23,000/–க்கு 2016 ல் பகிரங்க ஏலத்தில் விற்று விட்டோம். அந்த ஏலம் விட்டதற்கு முன்பாக 1,2 எதிரிமனுதாரர்களுக்கு நோட்டீஸ் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளோம். நாங்கள் உண்மையில் நோட்டீஸ் கொடுக்கவில்லை என்றாலும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. Award Arbitrator நியமிக்கச் சொல்லி மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் மனு செய்துள்ளேனா என்றால் இல்லை. எங்கள் நிறுவன வழக்குகளை பார்க்க கூடிய ஓய்வு பெற்ற ராமலிங்கம், சார்பு நீதிபதியை Arbitrator ஆக நியமித்தோம் என்றால் சரிதான். அவ்வாறு சார்பு நீதிபதியை நியமிக்க ஆட்சேபணை எதிர்மனுதாரரிடம் கேட்கப்படவில்லை. 1ம் எதிர்மனுதாரர் லாரி ரூ.2.23,000 /–க்கு விற்றது குறித்து அவருக்கு தெரிவிக்கப்பட்டதா என்றால் தபால் அனுப்பினோம். ரூ.4,50,000/க்கு விற்றதினால்தான் நாங்கள் 1ம் எதிர்மனுதாரருக்கு முறையாக தகவல் தெரிவிக்காமல் ரூ.2,23,000/– விற்றதாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. அதனால் Arbitrator வழங்கிய தீர்ப்பானது எதிர்மனுதாரருக்கு சார்பு செய்யப்படாததால் இயற்கை நீதிக்கு எதிரானது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரருக்கு Arbitrator நோட்டீஸ் அனுப்பியுள்ளாரா என்றால்

அனுப்பவில்லை. எனக்கு Arbitratorக்கு முன்பே சௌந்தரபாண்டி ரூ.79,200/- செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். ஏற்கனவே ரூ.79,200/- ம் வண்டி விற்ற தொகையான ரூ.4,50,000/- சேர்த்து ரூ.5லட்சத்துக்கு மேல் எங்கள் நிறுவனத்துக்கு கிடைக்கப் பெற்றமையால் மேற்படி எந்த தொகையும் செலுத்த தேவையில்லை என்றால் சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரருக்கு எந்த சொத்தும் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் கூலி வேலை செய்கிறாரா என்றால் டிரைவர் வேலை செய்கிறார். லாரி டிரைவர், பஸ்டிரைவர் கூப்பிடும்போது செல்வார்கள் என்றால் சரிதான்.அவருக்கு எந்த சொத்தும் இல்லாததால் அவரை நாங்கள் கைது செய்ய கோருவது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை - இல்லை.</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.12 20:56:47 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.